மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Tamil and Saivisam

D. Dhanalakshmi

Doctor of Philosophy, Department of Tamil, Queen Mary's College, Chennai, India

ABSTRACT:

The purpose of this article is to explore the excellence of Tamil language and its pride in Saivism and the contribution of Saivism and Tamil to the knowledge of governance.

KEYWORDS:

Tamil Language, Lord Siva, Religious Policy Shaivism

Manuscript ID : **MT127A0074**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 11.10.2022
Revised: 29.10.2022
Accepted: 17.11.2022
Published: 29.11.2022

Pages : 190-195

DOI: 10.5281/zenodo.7375229

தமிழும் சைவமும்

த. தனலட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, இராணி மேரி கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழ்மொழியின் சிறப்பையும் சைவ சமயத்தின் பெருமையையும் சைவசமயமும் தமிழும் பிணைந்து ஆற்றிய அரிய பங்களிப்பனையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருச்சொற்கள்

தமிழ்மொழி, சைவம், சிவன், சமயக் கொள்கைகள்

முன்னுரை

**"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும் ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாசி வெங்கதிடர்ஒன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!"**

தண்டி வேற்றுமையணி

உலகம் தோன்றிய நாள் தொட்டு மக்களிடையே சமயம் என்றே உலவி வருகின்றது. சமயம் மக்கள் உயிரோடும் உடலோடும் ஒன்றி நிற்கின்றது. கதிரவனையும் கதிர்களையும் தனித்தனியே பிரித்தற்கு இயலாது. அதுபோல் சமயத்தையும் மக்களையும் தனித்தனியாகப் பிரித்தலாகாது. அவர்களும் அதனை விட்டுத் தனித்து வாழ இயலாதவர்களாக உள்ளனர். இங்ஙனம் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்பற்றிருக்கும் சமயங்கள் பல அவற்றுள் சைவ சைமயமும் ஒன்று. இது பல உயரிய கொள்கைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பரந்த சமயமாகும்.

தமிழும் சமயமும்

சமயக் கொள்கைகள் கோட்பாடுகள், சிந்தனைகள் போன்றவற்றை பரப்பவும் மனிதனிடம் செல்லவும் மொழி என்கிற கருவி தேவைப்படுகிறது. பல்வேறு மொழிகள் இருப்பினும் தமிழ்மொழியானது சமயத்திற்கு பெரும்பங்காற்றியது. அத்தகைய சமயம்

என்பது மானிட சமூதாயத்தை நல்வழியில் வாழ வழிகாட்டும் தன்மை உடையதாகும். நன்னெறிகளின் தொகுப்பே சமயம் என்று கருதப்படுகின்றது. எல்லா சமயத்திற்கும் அடிப்படையானது இறை நம்பிக்கை. உலக மக்கள் அனைவரும் ஒரே சமயம் என்ற நிலை இல்லாமல் இந்து சமயம், கிறிஸ்துவ சமயம், இசுலாம் சமயம், பௌத்த சமயம், சமண சமயம் என்று பலவாறாக உள்ளன. பாரதநாடு என்றும் தெய்வ மணம் கமழும் திருநாடு, தெய்வம் உண்டு என்ற கொள்கை நினைப்பிற்கும் எட்டாத சிந்தனையாக நெடுங்காலமாக இந்நாட்டில் நிலவி வந்துள்ளது. இவ்வுலகத்தைப் படைப்பதும் தெய்வம், அழிப்பதும் தெய்வம் ஏன் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று போற்றுவது நம்நாடு. இத்தகைய இறை நம்பிக்கை உடைய கடவுளை தமிழர்கள் பலவாறு போற்றினார்கள். பல திருநாமங்களால் உரைத்தார்கள்

> **"ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்**
> **திருநாமம் பாடினாய் தெள்ளேணம் தொட்டாமோ"**
>
> **திருமுறை 8 பதி 11 பா 1**

என்று மாணிக்கவாசகத் தம் பதிகத்தில் கூறியுள்ளார்.

சைவ சமயத்தின் வழி சிவன்

சமயம் ஒரு தத்துவம், ஒரு மதக்கோட்பாடு, ஒரு வாழ்வியல் நெறி. இத்தகைய சமயம் இல்லாமல் மனிதன் இல்லை, அந்த அளவிற்கு சமயம் மானுட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றது. சமயங்கள் இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவையாகும். சமயங்களிடையே சடங்குகள் வழிபாட்டு முறை போன்றவைகள் மாறுபட்டாலும், சமயக் கொள்கை என்பது ஒன்றாகவே உள்ளது. இந்து சமயம் உலகில் தோன்றிய பழமையான சமயம் ஆகும். அவற்றுள் சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற நுல்களில் சிவனைப் பற்றிய செய்திகள் பல உள்ளன.

சைவ சமயத்தில் அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்ற திருமூலரின் கருத்தின் மூலம் 'அன்பே சிவம்' என்கிற தாரக மந்திரமே சைவ சமயத்தின் ஆணிவேராக அமைந்துள்ளது.

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே”

திரும பா 270

தெய்வத் தன்மையாகிய அன்பு இயற்கையாகவே ஒவ்வொருவரிடமும் உள்ளது. அவை வளர்ந்து விரிந்து பரவுதல் வேண்டும். நாம் முதலில் பெற்றோரிடம் அன்பு செலுத்துகின்றோம். பின்பு உற்றார் உறவினரிடம் அன்பு செல்கின்றது. அதன்பிறகு ஊராரிடம் நாட்டாரிடம் உலகத்தாரிடம் படிப்படியாகப் பரந்து நிலவுகின்றது.

ஏழாம் நுற்றாண்டில் சைவ நெறிக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதற்கு காரணம் இந்தக்காலத்தில்தான் சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோர் சைவ சமய வளர்ச்சிக்காக பல அரியத் தொண்டுகளையும் செயல்களையும் செய்தார்கள். சைவமும் தமிழும் இவர்களால் தழைத்தோங்கியது. சைவ சித்தாந்த தத்துவமானது பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் வலியுறுத்துகின்றது. சிவபெருமான் உயிரை நெருங்கினால் பாசமான தளை நம்மிடம் இருந்து அகலும் என்பதை திருமூலர் திருமந்திரத்தின் வழி உணர்த்துகின்றார்,

“பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதி அணுகிற் பசுபாசம் நில்லாவே”

திரும பா 115

“பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன்”

புறம் 91

என்று சிவபெருமானின் உருவத்தை பற்றி ஔவையார் கூறியுள்ளார்

“பிறவா யாக்கப் பெரியோன் கோயினம்”

சிலம் 170 **வரி**

என்னும் வரிகள் மூலம் இளங்கோவடிகள் சிவபெருமானின் தனித்துவத்தை கூறுகின்றார்

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவருமில்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரை யானே!"

திரும- பா 5

என்ற திருமந்திரத்தின் படி சைவத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான் என்பதை அறியலாம்

சிந்துசமவெளி நாகரிக காலத்தின் போதே சிவலிங்க வழிபாடு இருந்தமையை உறுதிப்படுத்தும் விதமாக அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த பொருட்களில் சிவலிங்கமும் ஒன்றாகும். சிவலிங்க வழிபாடு என்பது நம் பாரத நாட்டில் மட்டுமேயன்றி பல பகுதிகளில் பரவியிருந்ததை மேலைநாட்டு வரலாற்று அறிஞர்கள் எச்.எம். வெஸ்ட்ராப், இ.டி. டெய்லர் ஆகியோரின் நுல்களின் வழி அறியலாம்.

தமிழ்மொழியின் பங்களிப்பு

ஒரு மொழியை பயன்படுத்தும் திறமை, ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு. மொழி வளம் பெறும் போது சிந்தனையும் அறிவும் வளம் பெறும் பின்னர் அவை வலுப்படும், தகவல் பரிமாற்றத்திற்கு மொழி அவசியம். மனிதன் தோன்றிய காலம் முதலே மொழி என்னும் கருவி நடைமுறையில் இருந்தது. மனித உறவுக்கு ஒரு பாலமாக அமைகின்றது. நாட்டில் பல்வேறு மொழிகள் இருப்பினும் சமயத்திற்கு மிகப் பெரும் பங்காற்றியது நம் தமிழ்மொழியே ஆகும். சிவபெருமான் அருளைப் பெறும் சாதனங்கள் பலவற்றிக்கும் முக்கியமானது தமிழ்வேதம் அருளிய பன்னிரு திருமுறைகளாம். அக்கால மன்னர்களும் தமிழ்மொழியின் மீதும் சிவபெருமான் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டுள்ளதனைத் தஞ்சைப் பெரிய கோயிலின் சிறப்பினைக் கண்டு அறியலாம்.

கோயில்	தமிழ்மொழி எழுத்துகள்
இலிங்கத்தின் உயரம் 12 அடி	உயிர் எழுத்துக்கள் 12
கோயிலின் கோபுர உயரம் 18 அடி	மெய் எழுத்துக்கள் 18
கோயிலின் கோபுர உயரம் 216 அடி	உயிர் மெய் எழுத்துக்கள் 216
தமிழ்நாட்டில் பெரிய கோவில் 1	ஆய்த எழுத்து 1
சிவலிங்கத்திற்கும் நந்திக்கும் உள்ள இடைவெளி 247 அடி	தமிழ்மொழியின் மொத்த எழுத்துக்கள் 247

ஒரு சமூதாயத்தின் இலக்கியம், கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு போன்ற அனைத்தும் மொழியைச் சார்ந்தே அமைகின்றது.

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து, சங்கத்து
இருப்பிலே இருந்து வையை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்துஓர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்"

வில்லிபா 1

சிவபெருமானையும் தமிழையும் இயைபுபடுத்திப் பேசும் வழக்கமும் நம் தமிழ் சமூதாயத்தில் உண்டென்பதை,

"கண்ணு தற்பெருங் கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தஇப்
பசுந்தமிழ்"

திருவி பா 57

இப்பாடலின் வழி அறியலாம். இஃது எம்மொழியும் பெறாத தமிழின் தனிச்சிறப்பாகும். இத்தகைய தனித்துவமான தமிழ்மொழியில் சைவசமயம் மிகுந்த சிறப்பையும் பெருமையையும் பெற்றுள்ளது.

முடிவுரை

இவ்வாறு உயர்தனிச் செம்மொழியாகிய தமிழும், சைவமும் சிறப்புடன் பொலிவு பெற சைவச் சான்றோர்கள் பலரும் பாடுபட்டுள்ளனர். தமிழ்மொழி சான்றோர்கள் அனைவரும் தமிழையும் சைவத்தையும் இருகண்களாகவே கருதுகின்றனர். இந்து மதத்தின் உயிர்நாடியாக செந்தமிழ் விளங்குகின்றது. இஸ்லாம் மதத்திற்கு திருக்குரான் புனிதநூல் போல, கிறிஸ்த்தவர்களுக்கு பையிள் புனித நூல் போல இந்துமத சைவர்களுக்கு அறுபத்து நான்கு நாயன்மார்களும் அளித்த பன்னிரு திருமுறைகள் புனித நூலாகும். இத்தகைய பெருமை வாய்ந்த தமிழையும் சமயத்தையும் அனைவரும் அறிந்து உணர வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

துணைநூற்பட்டியல்

1. தண்டியலங்காரம், தண்டி புலியூர்கேசிகன் உரை
2. திருவாசகம் எட்டாம் திருமுறை, மாணிக்கவாசகர்
3. திருமந்திரம், திருமூலர்
4. திருமந்திரம், திருமூலர்
5. புறநானூறு, புலியூர்கேசிகன் உரை
6. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்
7. திருமந்திரம், திருமூலர்
8. வில்லிபாரதம், வியாசர்
9. திருவிளையாடற்புராணம், பரஞ்சோதி முனிவர்

REFERENCES

1. Thantiyalankaram, Puliyur Kesigan Urai
2. Thiruvasagam, Ettam Thirumurai, Manickavasigar
3. Thirumanthiran, Thirumular
4. Thirumanthiran, Thirumular
5. Purananooru, Puliyur Kesigan Urai
6. Silappatikaram, Elangovadigal
7. Thirumanthiran, Thirumular
8. Villi Bharatham, Vyasar
9. Thiruvilaiyadal Puranam, Paranjothi Munivar